பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 10 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆசிய – பசிபிக் வர்த்தக மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜெர்மன் பிரதமர் திரு. **Olaf Scholz** ஆகியோர் இன்று பங்கேற்க உள்ளனர்.

2. உச்சநீதிமன்றம், மக்களுக்கு சேவையாற்றி தனித்துவத்துடன் திகழ்வதாக தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

3. ஜார்கண்ட் சட்டப்பேரவை முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

4. வங்கக் கடலில் நிலைகொண்ட டானா தீவிர புயல் ஒடிசாவின் பிதர்கனிகா – தமாரா இடையே நள்ளிரவில் கரையைக் கடந்தது.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா நேற்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்தியா – ஜெர்மன் அரசுகளுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜெர்மன் பிரதமர் திரு. **Olaf Scholz** ஆகியோர் தலைமையேற்க உள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் இருதரப்பு பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

அத்துடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளனர்.

ஆசிய பசிபிக் வர்த்தக மாநாட்டிலும் அவர்கள் உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. சஞ்சீவ் கண்ணா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், ஓய்வுபெற உள்ள தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் உடனான ஆலோசனைக்குப் பிறகு திரு. சஞ்சீவ் கண்ணாவை உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. சஞ்சீவ் கண்ணா உச்சநீதிமன்றத்தின் 51வது தலைமை நீதிபதியாக அடுத்த மாதம் 11ஆம் தேதி பொறுப்பேற்க உள்ளார்.

அடுத்த ஆண்டு மே 13ஆம் தேதி வரை அவர் இப்பொறுப்பை வகிக்க உள்ளார்.

தற்போதை தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடுத்த மாதம் 10ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார்.

<<<<>>>>

உச்சநீதிமன்றம் நாட்டு மக்களின் உண்மையான நீதிமன்றமாக திகழ்கிறது என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்றம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆனதையொட்டி, ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் நமது நாட்டின் உச்சநீதிமன்றம், மக்களுக்கு சேவையாற்றி தனித்துவத்துடன் திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகாஷ்வாணியில் தாம் தொகுப்பாளராக இருந்தது உள்ளிட்ட பல்வேறு நினைவுகளை நேர்காணலில் பகிர்ந்துள்ளார்.

இந்நிகழ்ச்சி எஃ.எம். கோல்டு உள்ளிட்ட அலைவரிசைகளில் இன்றிரவு மணி 9.30க்கு ஒலிபரப்பாகிறது.

**News on Air** செயலி, **newsonair.gov.in** இணையதளம் மற்றும் சமூக வலைதளங்களிலும் இந்நிகழ்ச்சியைக் காணலாம்.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவை முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

பிஜேபி, ஐக்கிய ஜனதாதளம், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதளம் உள்ளிட்ட கட்சியின் வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன், பார்ஹெட் சட்டப்பேரவைத் தொகுதியிலும், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமர்குமார் சந்தன்கியாரி தொகுதியிலும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

காங்கிரஸ் சார்பில் 7 பேர் கொண்ட மேலும் ஒரு வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஜார்கண்ட் மாநிலத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் 27 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கேரளாவில் வயநாடு மக்களவை இடைத்தேர்தலில் போட்டியிட தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் நவ்யா ஹரிதாஸ் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. சத்யன் மோக்கேரி வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 45 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை சரத்பவார் பிரிவைச் சேர்ந்த தேசியவாத காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

மகாராஷ்டிரா நவ்நிர்மான் சேனா கட்சியும் தமது மூன்றாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் 48 பேர் கொண்ட முதலாவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ப்ரிதிவிராஜ் சவான், தெற்கு காரத் தொகுதியிலும் அம்மாநில காங்கிரஸ் தலைவர் திரு. **Nana Patole, Sakoli** தொகுதியிலும் போட்டியிட உள்ளனர்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலைகொண்ட டானா தீவிர புயல் ஒடிசாவின் பிதர்கனிகா – தமாரா இடையே நள்ளிரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அப்போது மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இந்த தீவிர புயல் பின்னர் புயலாக வலுவிழக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒடிசாவின் கேந்திரபாரா, பத்ராக் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மயூர்பஞ்ச், கட்டாக், ஜாஜ்பூர், பாலசோர், ஜகத்சிங்புர் மாவட்டங்களிலும் மழை பெய்து வருவதாக தெரிவித்துள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அரசு நிர்வாகம் தயார் நிலையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் கனமழை காரணமாக இடுக்கி, பத்தனம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம், திரிசூர் மாவட்டங்களில் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாநிலத்தின் 9 மாவட்டங்களில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று முதல் இரு தினங்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

புதிய கல்விக் கொள்கை உலகளவில் திறன் மற்றும் கல்வித் துறையில் இந்தியாவை தலைமைத்துவமாக திகழச் செய்யும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் நேற்று உளவியல் குறித்த சர்வதேச மாநாட்டை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மாணவர்களின் நலன் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் உளவியல் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டமைக்க மனநலனின் முக்கிய பங்கு குறித்து அமைச்சர் எடுத்துரைத்தார்.

அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று திரு. எல். முருகன் தெரிவித்தார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், தாய்லாந்து மற்றும் மொரீஷியஸ் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் முதல் முறையாக சேலம் மத்திய சிறையில் கைதிகளால் நடத்தப்படும் பண்பலை வானொலி தொடங்கப்பட்டுள்ளது.

இது அவர்களின் மன அழுத்தத்தை குறைக்க உதவும் நடவடிக்கை என்று கோவை சரக சிறைத்துறை டி.ஐ.ஜி. சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

இம்முயற்சி கைதிகளுக்கான சீர்திருத்த நடவடிக்கையில் மற்றொரு அம்சம் என்று சேலம் மத்திய சிறைக் கண்காணிப்பாளர் திரு. வினோத் தெரிவித்தார்.

<<<<>>>>

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோர் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கு அடுத்த மாதம் 14ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு விளையாட்டு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

**www.dbtyas-sports.gov.in** என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் கால்நடை கணக்கெடுக்கும் பணிகளை மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று தொடங்கி வைக்கிறார்.

அடுத்த ஆண்டு பிப்ரவரிமாதம் வரை இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

வீடுதோறும் நடைபெற உள்ள இந்த கணக்கெடுப்பில் சுமார் ஒரு லட்சம் அதிகாரிகள், கால்நடை மருத்துவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா நேற்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

அல்பேனியாவின் திரானா நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 59 கிலோ எடைப்பிரிவில் **Anjly** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

68 கிலோ எடைப்பிரிவில் மோனிகா – சீனாவின் **Xinze Du**-ஐ தோற்கடித்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

மலேசியாவின் ஜோஹரில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.35க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டி தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று துர்க்மெனிஸ்தானை எதிர்கொள்கிறது. தாய்லாந்தில் இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<>>>>

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 59 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி 44 புள்ளி 3 ஓவரில் 227 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

228 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நியூசிலாந்து மகளிர் அணி, 40 புள்ளி 4 ஓவரில் 168 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை – கோவா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கேரளா – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் பெங்கால் அணி – உத்தரப்பிரதேசத்தையும், ஹரியானா – ஜெய்ப்பூரையும் வென்றன.

ஹைதராபாதில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தமிழக அணி – பட்னா அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் பெங்களூரு – புனேவை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**